ICICI Bank

(இந்தியாவில் ஒருங்கிணைக்கப்பட்டது)

Registered Office: ICICI Bank Tower, Near Chakli Circle, Old Padra Road, Vadodara 390 007, India
Corporate Office: ICICI Bank Towers, Bandra-Kurla Complex, Mumbai 400 051, India

மார்ச் 31. 2021 நிலவிய இருப்புநிலக் குறிப்பு

₹ மில்லியனில்

	31.03.2021-ல்	31.03.2020-ல்
மூலதனமும் பொறுப்புகளும்		
மூலதனம்	13,834	12,948
நிலுவையிலுள்ள ஊழியர்களின் பங்கு உரிமைகள்	31	35
காப்புநிதிகளும் உபரியும்	1,461,227	1,152,061
வைப்புகள்	9,325,222	7,709,690
கைமாற்றுகள்	916,309	1,628,967
இதர பொறுப்புகளும் ஒதுக்குகளும்	587,704	479,950
மொத்த மூலதனமும் பொறுப்புகளும்	**12,304,327**	**10,983,651**
சொத்துகள்		
ரிசர்வ் பேங்க் ஆ·ப் இந்தியாவிலுள்ள ரொக்கமும் இருப்புகளும்	460,312	352,839
வங்கிகளிலுள்ள இருப்புகளும் அழைப்பு மற்றும் குறுகிய அறிவிப்பின் பேரில் கிடைக்கும் பணமும்	870,971	838,718
முதலீடுகள்	2,812,865	2,495,315
முன்பணம்	7,337,291	6,452,899
நிலைச் சொத்துகள்	88,776	84,103
இதர சொத்துகள்	734,112	759,777
மொத்த சொத்துகள்	**12,304,327**	**10,983,651**
சார்புநிலைப் பொறுப்புகள்	26,486,407	25,238,258
வசூலுக்குரிய உண்டியல்கள்	546,434	482,162

மார்ச் 31. 2021 முடிவுற்ற ஆண்டுக்குரிய லாப நட்டக் கணக்கு

₹ மில்லியனில்

	31.03.2021 முடிவுற்ற ஆண்டு	31.03.2020 முடிவுற்ற ஆண்டு
I. வருமானம்		
ஈட்டப்பட்ட வட்டி	791,183	747,983
இதர வருமானம்	189,685	164,486
மொத்த வருமானம்	**980,868**	**912,469**
II. செலவீனம்		
வழங்கப்பட்ட வட்டி	401,288	415,312
நடைமுறைச் செலவுகள்	215,608	216,144
ஒதுக்குகளும் சார்புநிலைகளும்	202,045	201,705
மொத்த செலவீனம்	**818,941**	**833,161**
III. லாபம் / (நட்டம்)		
ஆண்டுக்குரிய நிகர லாபம் / (நட்டம்)	**161,927**	**79,308**
முன்கொண்டு வரப்பட்ட லாபம்	213,275	178,796
மொத்த லாபம் / (நட்டம்)	375,202	258,104
IV. பகிர்வுகள் / மாற்றுகள்		
சட்டப்பூர்வ காப்புநிதிக்கு மாற்றியது	40,482	19,828
காப்புநிதிக்கு மாற்றியது	- 77	4
மூலதன காப்பு நிதிக்கு மாற்றியது	1,302	3,954
முதலீட்டு காப்புநிதி கணக்குக்கு/ (கணக்கிலிருந்து) மாற்றியது	..	..
காப்புநிதி கணக்கு முதலீட்டு காப்புநிதி கணக்குக்கு/ (கணக்கிலிருந்து) மாற்றியது	..	..
மாறுபாட்டுக் காப்புநிதி	- 2,496	6,690
வருமானம் மற்றும் இதர காப்பு நிதிகளுக்கு மாற்றியது	15,000	..
சிறப்புக் காப்புநிதிக்கு மாற்றியது	10,900	7,900
ஆண்டின்போது செலுத்தப்பட்ட லாப ஈவு	..	6,453
ஆண்டின்போது செலுத்தப்பட்ட நிறுவன லாப ஈவு வரி	..	..
இருப்புநிலைக் குறிப்பில் சேரக்கப்பட்ட இருப்பு	310,091	213,275
மொத்தம்	**375,202**	**258,104**

குறிப்பு: மேற்காணும் பலாபலன்கள் ICICI பேங்க் லிமிடெட்டின் தணிக்கையான தனித்த நிதி அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவை.

மூலதன வள விகிதம் (CRAR)

ICICI பேங்க் லிமிடெட் ஏப்ரல் 1,2013 முதல், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வரையறுத்த பாஸல் III மூலதன வள வழிகாட்டி விதிகளுக்கு உட்பட்டது. வழிகாட்டி விதிகள் மார்ச் 31. 2021 வரை பாஸல் III அமலாக்கத்திற்கான இடைப்பாட்டு நிலை காலத்திட்டத்தை வழங்குகிறது. வழிகாட்டி விதிகளின்படி, படி-1 மூலதனத்தில் பொது பங்குமுதல் படி-1 (CET 1) மூலதனமும் கூடுதல் படி-1 மூலதனமும் உள்ளடங்கும்.

மார்ச் 31, 2021 நிலவரப்படி. பாஸல் III வழிகாட்டி விதிகளின்படி, இடர் மதிப்பிடப்பட்ட சொத்துகளின் விகிதத்திற்கு (CRAR) குறைந்தபட்சம் 11.08% மூலதனத்தையும், குறைந்தபட்சம் 7.58% CET1 CRAR விகிதத்தையும், குறைந்தபட்சம் 9.08% படி-1 CRAR விகிதத்தையும் வங்கி நிலைநாட்டவேண்டும். குறைந்தபட்ச மொத்த CRAR, படி-1 CRAR, CET1 CRAR தேவைப்பாடுகளில் 1.88% மூலதனப் பாதுகாப்பு ஒதுக்கீடும் உள்நாட்டு நடைமுறை முக்கியத்துவம் பெற்ற வங்கியாக வங்கி நிர்ணயிக்கப்பட்டதன் தொடர்பிலான கூடுதலான 0.20% மூலதன தேவைப்பாடும் உள்ளடங்கும்.

பின்வரும் அட்டவணை, குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில், பாஸல் III வரையறைப்படியான மூலதன வள கணக்கீட்டைக் காட்டுகிறது.

₹ தவிகிதம் தவிர மில்லியனில்

விவரங்கள்	மார்ச் 31, 2021 நிலவரப்படி	மார்ச் 31, 2020 நிலவரப்படி
பொதுப் பங்குமுதல்படி 1 CRAR (%)	16.80%	13.39%
படி 1 CRAR (%)	18.06%	14.72%
படி 2 CRAR (%)	1.06%	1.39%
மொத்த CRAR (%)	19.12%	16.11%
திரட்டப்பட்ட சமபங்கு மூலதனத்தின் தொகை[1]	150,000.0	..
திரட்டப்பட்டக் கூடுதல் அடுக்கு-1 மூலதனத்தின் தொகை, அதில்		
1. நிரந்தரமான ஒட்டுமொத்தமல்லாத விருப்பப் பங்குகள்	..	..
2. நிரந்தரமான கடன் கருவிகள்	..	..
திரட்டப்பட்ட அடுக்கு-2 மூலதனத்தின் தொகை, அதில்		
1. கடன் மூலதனக் கருவிகள்	..	9,450.0
2. விருப்ப பங்கு மூலதனக் கருவிகள்	..	..
நிரந்தர ஒட்டுமொத்த விருப்பப் பங்கு (PCPS)/மீட்டெடுக்கத்தக்க ஒட்டுமொத்தமல்லாத விருப்பப் பங்குகள் (RNCPS)/மீட்டெடுக்கத்தக்க ஒட்டுமொத்த விருப்பப் பங்குகள் (RCPS)		

1. கூடுதலாக $ 5,306.3 மில்லியன் மார்ச் 31, 2021 -ல் முடிவடைந்த வருடத்தில் ஊழியர் பங்கு விருப்பங்களைப் பயன்படுத்தி திரட்டப்பட்டது (மார்ச் 31, 2020 முடிவடைந்த ஆண்டு: $ 5,505.1 மில்லியன்).

சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை

ICICI வங்கி லிமிடெட் உறுப்பினர்களுக்கு

தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கை குறித்த அறிக்கை

கருத்து

1. நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ICICI பேங்க் லிமிடெட்டின் (வங்கி) 31 மார்ச் 2021 வரையிலான இருப்புநிலைக் குறிப்பு, அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய லாப நட்டக் கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை , மற்றும் குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கைகளின் சுருக்கம், இதர விளக்கக் குறிப்புகள் ஆகியன உள்ளடங்கும் தனித்த நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்திருக்கிறோம். அனைத்துலகக் கிளைகளின் 31 மார்ச் 2021 முடிவுற்ற ஆண்டுக்குரிய பலாபலன்களும் இந்தத் தனித்த நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. துபாய், தென்னாப்பிரிக்கா, நியூயார்க் கிளைகள் அந்தந்த நாட்டு உள்நாட்டுத் தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டன.

2. எங்கள் கருத்துப்படியும், எங்களுக்குக் கிடைத்த தகவல் மற்றும் எங்களுக்குத் தரப்பட்ட விளக்கங்கள் ஆகியவற்றின்படியும், கீழ்க்காணும் பத்தி 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள கிளை தணிக்கையாளர்களின் அறிக்கைகள் மீதான பரிசீலனையின் அடிப்படையிலும், மேற்குறிப்பிட்ட தனித்த நிதி அறிக்கைகள் வங்கி விதிமுறை சட்டம், 1949-ன்படியும், நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்), ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வெளியிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் ஆகியவற்றின்படியும், தேவையான தகவல்களை வங்கி நிறுவனங்களுக்குத் தேவையான முறையில் வழங்குவதோடு, நிறுவனங்கள் (கணக்குகள்) விதிமுறைகள், 2014-ன் விதிமுறை 7-உடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் பிரிவு 133-ன் கீழ் இடம்பெறும் கணக்கியல் தரங்கள் உட்பட இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்ப 31 மார்ச் 2021 நிலவிய வங்கியின் பலாபலனையும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய லாபம் மற்றும் ரொக்கப் புழக்கத்தையும் உண்மையாகவும் நியாயமாகவும் படைக்கின்றன.

கருத்துக்கான அடிப்படை

3. நாங்கள் சட்டத்தின் பிரிவு 143(10)-ன் கீழ் வரையறுக்கப்பட்ட தணிக்கையை நடத்தினோம். இந்தத் தரங்களின் கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகளின் கீழ் முழுமையான நிதிநிலை அறிக்கைகளுக்கான எங்களின் தணிக்கைக்கு தொடர்புடையதாக நெறிமுறைக் குறியீட்டுக்கும் நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்வதற்குத் தேவையான சட்ட விதிமுறைகளுக்கும் சட்டத்தின்கீழ் இடம்பெறும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப வங்கியுடன் தொடர்பில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் மற்றும் நெறிமுறைக் குறியீட்டின்படி எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றினோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்களும், கீழ்க்காணும் மற்ற விவகாரங்கள் பகுதியின் பத்தி 16-ல் குறிப்பிட்டப்பட்டுள்ள கிளைத் தணிக்கையாளரின் அறிக்கைகளின் தொடர்பில் அவர்களால் பெறப்பட்ட தணிக்கை ஆதாரங்களும், போதுமானவை என்றும் எங்களுக்கு கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

வலியுறுத்தப்படும் விவகாரம்

4. SARS-CoV-2 வைரஸ் (கோவிட் -19) வெளிப்பட்டதன் காரணமாக ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளை விவரிக்கும் தணிக்கை செய்யப்பட்ட முழுமையான நிதிநிலை அறிக்கைகளின் 18.59 குறிப்புக்கு நாங்கள் கவனத்தை ஈர்க்கிறோம். வங்கியின் முடிவுகளில் இந்த நிச்சயமற்ற தன்மையின் தாக்கம் எதிர்கால முன்னேற்றங்களை கணிசமாக சார்ந்துள்ளது.

முக்கிய தணிக்கை விவகாரங்கள்

5. முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டினையும். கீழ்க்காணும் பத்தி 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள கிளை தணிக்கையாளர்களின் அறிக்கைகள் மீதான பரிசீலனையின் அடிப்படையிலும், நடப்பு காலக்கட்டத்தில் தனித்த நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்து தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை.

6. நாங்கள் கீழ்காணும் விவகாரங்களை எங்கள் தணிக்கையில் தெரியப்படுத்த வேண்டிய முக்கிய தணிக்கை விவகாரங்களாகத் தீர்மானித்திருக்கிறோம்.

a. தகவல் தொழில்நுட்ப இயங்கமுறைகள் மற்றும் நிதி தகவலளிப்பைப் பாதிக்கும் கட்டுப்பாடுகள்

முக்கியத் தணிக்கை விவகாரம்	முக்கிய தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது
வங்கியின் தகவல் தொழில்நுட்பச் தழல் சிக்கலானது. வங்கியின் செயல்பாட்டு நடைமுறைகளிலும் பல்வேறு இடங்களில் பெருமளவு பரிவர்த்தனைகளின் பதிவிலும் ஏராளமான சுயேச்சையான மற்றும் ஒன்றையொன்று சார்ந்துள்ள தகவல் தொழில்நுட்ப இயங்குமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக. வங்கியின் நிதித் தகவலளிப்பு நடைமுறைக்கு இத்தகைய தகவல் தொழில்நுட்ப இயங்குமுறைகள் மீது அதிகளவு சார்நிலை நிலவுகிறது. நம்பகமான நிதித் தகவல்களிப்புகாக இத்தகைய தகவல் தொழில்நுட்ப இயங்குமுறைகளால், தேவையானபடி, தரவுகளை முழுமையாகவும், துல்லியமாகவும், சீராகவும் பரிசீலிக்க இயலுவதை உறுதிப்படுத்த பொருத்தமான தகவல் தொழில்நுட்பப் பொதுக் கட்டுப்பாடுகளும் பயன்முறைக் கட்டுப்பாடுகளும் தேவைப்படுகின்றன. நிதித் தகவலளிப்பு முறையின் துல்லியமும் நம்பகத்தன்மையும் தகவல் தொழில்நுட்ப இயங்குமுறைகளையும் அதைச் சார்ந்த கட்டுப்பாட்டுச் தழலையும் சார்ந்துள்ளன, பின்வருவன உட்பட: ➢ பயன்பாட்டாளர் அணுகல் நிர்வாகம் மற்றும் பயன்முறைகள், கட்டமைப்புகள், தரவுத்தளம், செயல்பாட்டு இயங்குமுறைகள் மீதான பொதுவாக தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் ➢ தகவல் தொழில்நுட்பப் பயன்முறை கட்டுப்பாடுகள் வங்கியின் நிதித் தகவலளிப்பு நடைமுறைமீது தகவல் தொழில்நுட்ப இயங்குமுறைகளும் அவை சார்ந்தக் கட்டுப்பாட்டுச்தழலும் முக்கிய பாதிப்பை உண்டாக்கக்கூடும். என்பதால், நடப்பு தணிக்கை ஆண்டுக்கான முக்கிய தணிக்கை விவகாரமாக இது போன்ற தகவல் தொழில்நுட்ப இயங்குகளையும் அவைசார்ந்த கட்டுப்பாட்டுச் தழலையும் அடையாளம் கண்டிருக்கிறோம். நிதி தகவலளிப்புக்குத் தேவையானதகவல் தொழில்நுட்ப முறைகளின் ஒருமைப்பாட்டைப் பரிசீலிக்கையில், தகவல் தொழில்நுட்ப் பொது கட்டுப்பாடுகளையும், தகவல் தொழில்நுட்ப் பயன்முறைக் கட்டுப்பாடுகளையும் ஆராய்வதற்கும் சோதிப்பதற்கும், வங்கியின் நிதி தகவலளிப்பு நடைமுறை சார்ந்த தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகளையும் இயங்குமுறைகளையும் புரிந்துகொள்ள எங்களது தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை நாங்கள் ஈடு படுத்தினோம். நிதி தகவலளிப்பு சார்ந்திருக்கப்படும் பயன் முறைகள், செயல்பாட்டு இயங்குமுறைகள், கட்டமைப்புகள் தரவுத்தளங்கள் ஆகியவற்றில் அணுகல் உரிமைகள் சோதிக்கப்பட்டன. அணுகல் உரிமைகளை வழங்குதல், நீக்குதல், குறிப்பிட்ட கால இடைவெளியில் மறு ஆய்வு செய்தல் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளின் நடைமுறை செயலாற்றலையும் நாங்கள் பரிசீலித்தோம். பயன்முறைகள், செயல்பாட்டு இயங்குமுறை அல்லது தரவுத்தளங்கள் ஆகியவற்றில் மாற்றம் செய்வதற்கான அணுகல், அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதை உறுதிபடுத்தும் நடுப்புக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பொறுப்பு பிரிவினையையும் நாங்கள் மேற்கொண்டு சோதித்தோம். தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுச் தழலின் கீழ் பரிசீலிக்கப்பட்ட மற்றவற்றுள் மறைச்சொல் கொள்கைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், தொழில் நீட்டிப்புநிலை, மாற்ற நிர்வாகம் சார்ந்த கட்டுப்பாடுகள் உள்ளடங்கின. அதோடு, பல்வேறு தொழில் நடைமுறைகளில் இருந்து முக்கிய தானியங்க கட்டுப்பாடுகளின் நடைமுறை செயலாற்றலின் வடிவமைப்பையும் நாங்கள் ஆராய்ந்து சோதித்தோம். இயங்குமுறை இடைமுகப்புகளின் ஒருமைப்பாடு, தரவு உள்ளீடுகளின் முழுமை மற்றும் துல்லியம், இயங்குமுறை சீரமைப்புக் கட்டுப்பாடுகள் தானியக்க கணக்கீடுகள் ஆகியவற்றின் சோதனை இதில் உள்ளடங்கியது. குறைபாடுகள், அடையாளம் காணப்பட்ட போது, தாங்கள் மாற்றுக் கட்டுப்பாடுகளை சோதனை செய்தோம் அல்லது மாற்று நடைமுறைகளை மேற்கொண்டோம்.	முறைகளின் ஒருமைப்பாட்டைப் பரிசீலிக்கையில், தகவல் தொழில்நுட்ப் பொது கட்டுப்பாடுகளையும், தகவல் தொழில்நுட்ப் பயன்முறைக் கட்டுப்பாடுகளையும் ஆராய்வதற்கும் சோதிப்பதற்கும், வங்கியின் நிதி தகவலளிப்பு நடைமுறை சார்ந்த தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகளையும் இயங்குமுறைகளையும் புரிந்துகொள்ள எங்களது தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை நாங்கள் ஈடு படுத்தினோம். நிதி தகவலளிப்பு சார்ந்திருக்கப்படும் பயன் முறைகள், செயல்பாட்டு இயங்குமுறைகள், கட்டமைப்புகள் தரவுத்தளங்கள் ஆகியவற்றில் அணுகல் உரிமைகள் சோதிக்கப்பட்டன. அணுகல் உரிமைகளை வழங்குதல், நீக்குதல், குறிப்பிட்ட கால இடைவெளியில் மறு ஆய்வு செய்தல் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளின் நடைமுறை செயலாற்றலையும் நாங்கள் பரிசீலித்தோம். பயன்முறைகள், செயல்பாட்டு இயங்குமுறை அல்லது தரவுத்தளங்கள் ஆகியவற்றில் மாற்றம் செய்வதற்கான அணுகல், அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதை உறுதிபடுத்தும் நடுப்புக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பொறுப்பு பிரிவினையையும் நாங்கள் மேற்கொண்டு சோதித்தோம். தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுச் தழலின் கீழ் பரிசீலிக்கப்பட்ட மற்றவற்றுள் மறைச்சொல் கொள்கைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், தொழில் நீட்டிப்புநிலை, மாற்ற நிர்வாகம் சார்ந்த கட்டுப்பாடுகள் உள்ளடங்கின. அதோடு, பல்வேறு தொழில் நடைமுறைகளில் இருந்து முக்கிய தானியக்க கட்டுப்பாடுகளின் நடைமுறை செயலாற்றலின் வடிவமைப்பையும் நாங்கள் ஆராய்ந்து சோதித்தோம். இயங்குமுறை இடைமுகப்புகளின் ஒருமைப்பாடு, தரவு உள்ளீடுகளின் முழுமை மற்றும் துல்லியம், இயங்குமுறை சீரமைப்புக் கட்டுப்பாடுகள் தானியக்க கணக்கீடுகள் ஆகியவற்றின் சோதனை இதில் உள்ளடங்கியது. குறைபாடுகள், அடையாளம் காணப்பட்ட போது, தாங்கள் மாற்றுக் கட்டுப்பாடுகளை சோதனை செய்தோம் அல்லது மாற்று நடைமுறைகளை மேற்கொண்டோம்.

b. கோவிட் -19 தொடர்பான நடவடிக்கைகளை செயல்படுத்துவது உட்பட செயல்படாத சொத்துக்களுக்கான ('NPA கள்') அடையாளப்படுத்தல் மற்றும் ஒதுக்குகள்

31 மார்ச் 2021 நிலவரப்படி, வங்கி அறிவித்த மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் (ஒதுக்குகளின் நிகரம்) ரூ. 7,337,291 மில்லியன் (2020-ரூ. 6,452,900 மில்லியன்), மொத்த செயல்படா சொத்துகள் ரூ. 408,414 மில்லியன் (2020: ரூ.408,291 மில்லியன்) , மற்றும் செயல்படா சொத்துக்களுக்கான ஒதுக்குகள் ரூ. 317,238 மில்லியன் (2020: ரூ. 309,058 மில்லியன்), 31 மார்ச் 2021 நிலவிய ஒதுக்கு காப்பீட்டு விகிதம் 77.7% (2020: 75.7 மூ).

(அத்தியாயம் 9, 17.3, 18.16, 18.19 மற்றும் 18.27 தணிக்கை செய்யப்பட்ட தனி நிதி அறிக்கைகள்)

முக்கியத் தணிக்கை விவகாரம்	முக்கிய தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது
சொத்துக்களை அடையாளம் காணுதலும் முன் படங்களுக்கு ஒதுக்கு செய்வதும் ஆர்பிஐ விதிமுறைகளின்படி அல்லது அனைத்துலக கிளைகளை பொறுத்தவரை அந்தந்த நாட்டு விதிமுறைகளின்படி செய்யப்படுகின்றன எங்களது இடர் பரிசீலனையின்படி சொத்துக்களுக்கான ஒதுக்கீடு நிலையில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை ➢ வருமான அங்கீகரிப்பு ஆய்வு மற்றும் முன் பணங்கள் சார்ந்த ஒதுக்கு குறித்த ஆர்பிஐ செயலறிவு வழக்கங்களில் (IRAC norms) வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின்படி அல்லது செயல்படும் நாட்டின் விதிமுறைகளின்படி தவணை தவறல அங்கீகரித்தல். மேலும் குறிப்பிட்ட தரநிலை அம்சங்களைப் பயன்படுத்தி செயல்படா சொத்துக்களை அடையாளம் காண்பதற்கு அதன் மதிப்பாய்வைப் பயன்படுத்த வேண்டும். மேலும், வங்கி சில தரமான அம்சங்களைப் பயன்படுத்துவதன் மூலம் NPA களை அடையாளம் காண வேண்டும். ➢ 17 ஏப்ரல் 2020 தேதியிட்டு ஆர்பிஐயால் அறிவிக்கப்பட்டட "கோவிட் 19 ஒழுங்குபடுத்தல் தொகுதி- சொத்து வகைப்படுத்தல் மற்றும் ஒதுக்குகளின்" நடைமுறையப்படுத்தல் மற்றும் கோவிட்-19 ஒழுங்குப்படுத்தல் தொகுதியின் காலாவதியைத் தொடர்ந்து 'சொத்து வகைப்படுத்தல் மற்றும் வருமான அங்கீகாரம்' மீதான ஆர்பிஐ சுற்றறிக்கை - 07 ஏப்ரல் 2021 தேதியிடப்பட்டது (கூட்டாக'ஆர்பிஐ சுற்றறிக்கைகள் என்று குறிக்கப்படுவது'), மற்றும் 6 ஆகஸ்டு 2020 அன்று ஆர்பிஐ வழங்கிய 'கோவிட்-19 தொடர்பான அழுத்தம் மீதான தீர்வுக்கட்டமைப்பு' ('தீர்வு கட்டமைப்பு', இவை செயல்படாத சொத்துக்களை அடையாளம் காணல் மற்றும் ஒதுக்குகள் நிர்வாகத்தால் கருதப்படும். நிர்வாகத்தால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், வங்கியின் கடன்கள் மற்றும் சொத்துகளின் மீட்டெடுப்பில் கோவிட்-19-ன் தாக்கத்தின் காரணமாக தவணைத் தவறல்கள் அதிகரிக்கக்கூடும் என்பதால் 31 மார்ச் 2021-ன்படி ₹74,750க்கான கடனை நிறுத்தி வைத்துள்ளது மேற்கூறிய இடருக்கு தீர்வு காண்பதற்காக சில்லறைக் கடன்கள் மீதான உள்ளார்ந்த ஒதுக்குகள் கொள்கையையும் வங்கி திருத்தியுள்ளது. கூடுதல் ஒதுக்குகள் மதிப்பீட்டின் அடிப்படையில் மற்றும் மேற்சொன்ன கூடுதல் கடன் வழங்கலுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள் அவ்வப்போது வங்கியின் மறுஆய்வுக்குட்பட்டவை ஏனென்றால் கோவிட்-19 பரவல் விகிதம், அரசாங்கமும் மத்திய வங்கியும் பொருளாதாரத் தாக்கத்தைக் கட்டுபடுத்துவதற்காக எடுக்கும் தற்போதைய மற்றும் எதிர்கால நடவடிக்கைகளின் ஆற்றல் மற்றும் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைகளுக்குத் திரும்புவதற்காக பொருளாதார நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் காலம் ஆகியவற்றை உள்ளடக்கி எதிர்கால மேம்பாடுகளை இவை சார்ந்திருக்கின்றன. ➢ ஆர்பிஐ வழிகாட்டிகளின்கீழ் ஒதுக்குகளை அளவிடுவது காலாவதியான இருப்பு தொகைகளின் காலகட்டம், ஈடுள்ளாஈடில்லாத முன்பணங்களின் நிலை, குறிப்பிட்டத் துறைகளின் நெருக்குதல் மற்றும் பணமாக்கல், ஈட்டுப்பொருளின் மதிப்பீடு ஆகியவற்றை சார்ந்துள்ளது. குறிப்பிட்ட சில வெளிநாட்டுக் கிளைகளின் செயல்படா சொத்துகளுக்கான ஒதுக்குத் தொகைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால ரொக்கப் புழக்கம் ஆகியவற்றின் தருணம் குறித்த கணிப்புகள் தேவைப்படுகிறது அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகுப்புகளையும் கடன்தடைக் காலத்தையும் நீடிப்பதற்காக அதன் அடிப்படை தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளில் மாற்றங்களை வங்கிகள் நடைமுறைப்படுத்துவது ஆர்பிஐ சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்தத் தேவைப்படுகிறது. தற்போதைய ஆண்டில் கோவிட்-19-ன் தாக்கத்தின் காரணமாக கூடுதல் சிக்கல்கள் உள்ளன மற்றும் குறிப்பிட்டத்தக்க தணிக்கையாளர் கவனம் தேவைப்படுகிறது. மேற்காணும் விவரம் நிதி அறிக்கைகளில் வகிக்கும் குறிப்பிடத்தக்க தன்மையையும் அதன் கணிப்புகளையும் அதிகரித்துள்ள ஒழுங்குமுறை கண்காணிப்பு களையும் தேவைப்படும் குறிப்பிடத்தக்கது தணிக்கையாளர் கவனத்தையும் கருத்தில் கொண்டு நடப்பு தணிக்கை ஆண்டுக்கான முக்கிய விவகாரமாக இதனை அடையாளம் காண்கிறோம்.	நாங்கள் நடைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் புரிந்துகொண்டு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கட்டுப்பாடுகள் உள்ளிட்ட முக்கிய கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் நடைமுறை செயலாற்றலையும் சோதித்து. பின்வருபவற்றில் கவனம் செலுத்தினோம் ➢ ஆர் பி ஐ IRAC வழக்கங்களுக்கும் குறிப்பிட்ட தரநிலை அம்சங்களுக்கும் ஏற்ப செயல்பட சொத்துக்களை அடையாளம் காணுதல் மற்றும் பகுத்தல் ➢ சொத்துத் தரத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் மறு ஆய்வு செய்தல் ➢ செயல்படா சொத்துக்களுக்கான ஒதுக்குகளின் ஏற்ற அளவை பரிசீலித்தல் மற்றும் ➢ செயல்படா சொத்துக்களுக்கான ஈட்டு பொருளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் மதிப்பீடு செய்தல். ➢ ஆர்பிஐ சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தவணை தவறல் நிகழ்வுகள் மற்றும் இதர தூண்டுதல் காரணங்களின் அடிப்படையில் கடன்கள் அடையாளம் காணப்படுவதைச் சோதிக்க, நாங்கள் செயல்படும் கடன்களின் மதிப்பு கூறுகளை தேர்ந்தெடுத்து. இந்த கடன்களை செயல்படா சொத்துக்களாகப் பகுப்பது அவசியமா என்பதை சுயேச்சை முறையில் பரிசீலித்தோம். செயல்படா சொத்துக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்குகளைப் பொறுத்தவரை கப்பல்துறை. நுரப்பணமெடைகள், எரிசக்தி, நிலச்சுரங்கம், எண்ணெய் மற்றும் எரிவாயு ஆராய்வு போன்ற வங்கி அடையாளம் கண்ட உயர் இடருள்ள தொழில் துறைகளிலிருந்து மாதிரிகூறுகளை தேர்ந்தெடுத்தோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகூறுகளில் நாங்கள் ஈட்டு பொருட்களின் மதிப்பீட்டு உள்ளிட்ட ஒதுக்குகளை மறுபடியும் கணக்கிட்டு , நிர்வாகம் தயாரித்த கணக்கீட்டுடன் ஒப்பிட்டு நிர்வாகம் பயன்படுத்திய பற்பல ஊகங்களுக்கும், மதிப்பாய்வுகளுக்கும் சவால்விட்டோம். தொழில்துறைகள் குறித்தும் இத்தகைய சொத்துக்களை கண்காணிக்க நிர்வாகம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தினோம் நாங்கள் ஆண்டு இறுதியில் 2020 முடிவுற்ற நிதி ஆண்டுக்கான ஆர்பிஐ வருடாந்த நிதி சோதனை அறிக்கையையும் ஒழுங்குமுறை அமைப்புகளுடனான மற்ற கருத்து பரிமாற்றங்களையும் வாசித்தோம். ஆர்பிஐ சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப ஒரு கடன் தடை வழங்கப்பட்டக் கடன் பெறுபவர்கள் தொடர்பாக, ஒரு மாதிரி அடிப்படையில், நிர்வாகக் குழு ஒப்புதல் வழங்கிய கொள்கையின்படி வழங்கப்பட்ட அத்தகைய கடன் தடையை பரிசோதித்து அவற்றை கணினி அமைப்புகளில் நடைமுறைப்படுத்தினோம். ஒரு பரிசோதனை அடிப்படையில், NPAகளை அடையாளம் காண்பதையும், கடன் வழங்கல்கள் உருவாக்கப்படுவதையும், ஆர்பிஐ சுற்றறிக்கைகளின் தேவைகளுக்கு ஏற்ப சொத்து வகைப்படுத்தல் இருப்பதையும் உறுதி செய்கிற கடன்களை நாங்கள் பரிசோதித்தோம், மேற்கொண்டு, கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக வங்கியால் வழங்கப்பட்டக் கூடுதல் கடன்கள் தொடர்பாக, வாடிக்கையாளர்களின் இடர் விவரக்குற